பாடம் 8

# 8. இறைவன் தரும் பாதுகாவல்

நமது வாழ்வில் பல கட்டங்களில் நாம் பிரச்சனைகளை எதிர்நோக்குகிறோம். பல வேளைகளில் சில பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியாது நாம் நிலைகுலைகின்றோம். எவராலும் உதவமுடியாத அந்நேரங்களில், நம்மைப் படைத்த கடவுள் நமது வாழ்வில் அக்கறை கொள்ளவில்லையா என்று அவரை நோக்கும் போது, இறைவனின் வல்ல கரம் செயல்படுவதை நாம் உணர்கிறோம். வாழ்வில் முக்கிய கட்டங்களில் கடவுளின் பாதுகாவலும் அடைக்கலமும் நமக்குக் கிடைக்கின்றன. இவ்வாறான ஒரு முக்கிய அனுபவத்தை நாம் இஸ்ரயேலரின் பாலைநில யாத்திரையிலிருந்து நோக்குவோம்.

## இஸ்ரயேலரை முன்செல்லமுடியாது தடுக்கும் செங்கடல்



மோசேயின் தலைமையின் கீழ் எகிப்தியஅடிமைத்தனத்திலிருந்து தப்பிவந்து, இஸ்ரயேல் மக்கள் பிசுகிரோத்து என்ற இடத்திற்கு வந்தனர். அவர்கள் கண்களுக்கு முன் செங்கடல் பரந்து கிடந்தது. அவர்கள் எகிப்தை விட்டு புறப்பட அனுமதித்த பார்வோன் மன்னன், பின்னர், தமக்கு அடிமைகளாக ஊழியம்செய்த இஸ்ரயேலரை அனுப்பிவிட்டோமே என்று வருந்தினான். திரும்பவும் அவர்களை எகிப்திற்கு கொண்டுவரும்படி தன்னுடைய குதிரைவீரர், தேர்கள் என்பனவற்றை அனுப்பினான். அதனைக் கண்ட இஸ்ரயேல் மக்கள் அச்சமுற்றவர்களாக ஆண்டவரை நோக்கி கூக்குரல் எழுப்பினர்.



பீதியுற்ற இஸ்ரயேலர், பாலைநிலத்தில் செத்தொழிவதைவிட, எகிப்தியருக்கு ஊழியஞ் செய்வதே நலமென முறுமுறுத்தனர். அப்போது மோசே, “அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள் . . . . ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார்; நீங்கள் அமைதியாயிருங்கள்.” என்றார்.



## இஸ்ரயேலருக்குப் பாதுகாவல் கொடுத்த இறைத்தூதர்



இஸ்ரயேல் மக்களுக்கு முன் சென்றுகொண்டிருந்த இறைத்தூதர் அவர்களுக்குப் பின் புறம் வந்தார். முன் இருந்த மேகத்தூணும் பின்பக்கம் வந்து நிலைகொண்டது. இதனால் எகிப்தியர் இஸ்ரயேலரைக் கிட்ட முடியாது போனது.



## செங்கடல் பிரிகிறது

கடவுள் மோசேக்கு கட்டளையிட்டபடியே கையை கடல்மேல் நீட்டவே, ஆண்டவர் கீழைக் காற்றை இரவு முழுவதும் வன்மையாக வீசச்செய்து கடலைப் பின்வாங்கவைத்து, உலர்ந்த தரையாக்கினார். நீர்த்திரள் பிரிக்கப்பட்டது. இரு பக்கங்களிலும் நீர்த்திரள் சுவராக நின்றது.





இஸ்ரயேல் மக்கள் நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். எகிப்திய படை அவர்களைப் பின் தொடர்ந்து நடுக்கடல் வரை சென்றது. மோசே திரும்பவும் தமது கையை கடல்மேல் நீட்டவும் நீர்த்திரள் புரண்டு வந்து எகிப்திய படையை அழித்துப்போட்டது. இஸ்ரயேல் மக்கள் திரும்பவும் ஆண்டவரிடமும், அவர் அடியார் மோசேயிடமும் நம்பிக்கை வைத்தனர். மோசே ஆண்டவருக்கு நன்றி கீதம் பாடினார்.

## மோசே ஆண்டவரை புகழ்ந்து பாடிய பாடலின் ஒரு பகுதி

### விடுதலைப்பயணம் 15: 8-13



“உம் நாசியின் மூச்சால்
நீர்த்திரள்கள் குவிந்தன;
பேரலைகள் சுவரென நின்றன;
கடல் நடுவில் ஆழங்கள்
உறைந்து போயின.

எதிரி (எகிப்தியன்) சொன்னான்,
‘துரத்திச் செல்வேன்;(இஸ்ரயேலரை)
முன் சென்று மடக்குவேன்,
கொள்ளைப் பொருளைப்
பங்கிடுவேன்; என் மனம் இதனால்
நிறைவுகொள்ளும். . . .

நீரோ உமது காற்றை வீசச்செய்தீர்;
கடல் எகிப்தியரை மூடிக்கொண்டது;
ஆற்றல் மிகு நீர்த்திரளில் அவர்கள்
ஈயம்போல் அமிழ்ந்தனர். . . .

நீர் மீட்டுக்கொண்ட மக்களை
உம் பேரருளால்
வழிநடத்திச் சென்றீர்;
உம் ஆற்றலால் அவர்களை உம் புனித உறைவிடம்
(கானான்) நோக்கி
வழிநடத்திச் சென்றீர்’



இலவச விநியோகத்திற்காக

## செங்கடல் நிகழ்வு நமக்கு கற்பிப்பவை

- கடவுள் மனுமக்கள் வாழ்வில் ஈடுபாடுடையவராயிருக்கிறார்.
- மனுமக்களின் குரலைக் கேட்கும் ஆண்டவர் அவர்களை ஆபத்திலிருந்து விடுவிக்க வரலாற்றில் தலையிட வல்லவராயிருக்கிறார்.
- இன்றும் ஆபத்துக்களின் மத்தியில் நம்மை வழி நடத்தக்கூடியவராயிருக்கிறார்.

## பாதுகாப்பு கொடுப்பது பற்றிய இயேசுவின் சிந்தனை

- ஆண்டவர் இயேசு ஆபத்தில் இருந்த மக்களின் பாதுகாவலைப் பற்றி கரிசனையுடையவராயிருந்தார். உதாரணமாக, தமது சீடர்கள் மூழ்கிப் போகவிருந்த வேளையில் அவர்களை மீட்டார்.
- ஆண்டவர் இயேசு தமது சொந்த பாதுகாப்பிற்காகத் தமது அழைப்பையும், திருப்பணியையும் தியாகம் செய்யவிரும்பவில்லை.
- பிறமக்களின் விடுதலைக்கென தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து பிதாவின் சித்தத்திற்கு இணங்கினார்.

## சிந்திக்கவும்

- இன்று நாம் ஆபத்துக்களை மேற்கொள்வதற்கு கடவுளின் அருள், வழிகாட்டல் என்பவற்றில் தங்கியிருக்கிறோமா?
- பிறரின் பாதுகாவலுக்கு நாம் கொடுக்கும் இடம் என்ன?

## செயற்பாடு

- இன்று எவ்வாறான ஆபத்துக்கள் நம்மைச் சூழ்ந்துள்ளன?
- அதிக ஆபத்துக்களின் மத்தியில் வாழ்வோர் யார்?
- இச்சூழலில் நாம் நல்ல அயலவராகச் செய்யக்கூடியது என்ன?